Scale Em Tempo 125 Style Pop> Country Shuffle

10. மாயையான லோகம்

மாயையான லோகத்திலே கோடி கோடி சேர்த்து தன்
ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் (மத் 16:26)
அதனால் லாபம் ஒன்றும் இல்லை மகனே - மகளே

பல்லவி

மாயை மாயை மாயை காண்பதெல்லாம் மாயை (2)
தேவன் நமக்கு தரும் வீடோ பரலோகம்
அதை வாஞ்சையோடு பெற்று கொள்வோம் இலவசம்

1

கண்ணானது சரீரத்தின் விளக்கல்லவா
அது கெட்டதானால் சரீரம் இருளல்லவா (லூக் 11:34)
உன் கண்ணோடு நீ உடன்படிக்கை செய்து கொண்டால்
யோபு 31:1)
உன் தேவனை அனுதினமும் தரிசிப்பாய்

2

மதுபானம் கண்களுக்கு இனிமையாயிருக்கும் (நீதி 23:31)
அது முடிவிலே பாம்பைப் போல் தீண்டிவிடும் (நீதி 23:32)
உன் சரீரம் உன்னுடையது அல்லவென்றும்
அது தேவனுடைய ஆலயம் என்றறிந்திடுவாய்(1கொரி 6:19)

---